5. அறிக்கை அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். *(குறுக்கீடுகள்)* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ். *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை, இதிலே விவாதத்திற்கு இடமில்லை. இதையெல்லாம் நிதிநிலை அறிக்கையிலே பேசுங்கள். *(குறுக்கீடு)* திருமதி வளர்மதி ஜெபராஜ். *(குறுக்கீடுகள்)* திருமதி வளர்மதி ஜெபராஜ். *(குறுக்கீடுகள்)* இல்லை, இதிலே விவாதத்திற்கு இடமில்லை. திருமதி வளர்மதி ஜெபராஜ். *(குறுக்கீடுகள்)*

முற்பகல் 11-15

***திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கையரை வாழவைக்க வந்த மங்கையர்த் திலகமே, *(குறுக்கீடுகள்)* மங்கையராய்ப் பிறந்தவரெல்லாம் மனமகிழ்வு அடைய மகளிர் திட்டம் தீட்டும் காவல் தெய்வமே *(மேசையைத் தட்டும் ஒலி)* *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் பேசட்டும். இதில் விவாதத்திற்கு இடம் இல்லை. *(குறுக்கீடு)* விவாதத்திற்கு இடம் இல்லை இதில்.

திருமதி வளர்மதி ஜெபராஜ்: காவல் தெய்வமே, உலகமே மகளிர் தினத்தைக் கொண்டாடுகின்ற இந்த நல்ல திருநாளில் உலக மகளிருக்கெல்லாம் எடுத்துக்காட்டாய் விளங்கும் தங்களின் பாதம் வணங்கி. . . *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே சொல்லிவிட்டீர்கள், முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். முடிந்துவிட்டது.

திருமதி வளர்மதி ஜெபராஜ்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 2003–2005 ஆம் ஆண்டிற்கான ஐம்பத்து மூன்றாவது அறிக்கையினை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். *(குறுக்கீடுகள்)*